# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.123/2025

Deposition of Witness for L.W.1 / P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராதிகா | | | |
| Husband's Name | : | சுப்பிரமணி | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | அசோகபுரம் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.01.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு அசோகபுரத்தில் குடியிருந்து கொண்டு, இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனக்கும், அவருக்கும் சுமார் 2 வருட காலமாக பழக்கம் இருந்து வருகிறது. நான் லட்சுமி தியேட்டர் அருகில் உள்ள, பட்டியல் சாட்சி-3 ஞானசம்பந்தம் என்பவரது ஜெராக்ஸ் கடையில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த எதிரி எனக்கும், ஞானசம்பந்தம் என்பவருக்கும் தொடர் இருப்பதாக என்னை சந்தேகப்பட்டு அடிக்கடி பிரச்சினை செய்து வந்தார். இது தொடர்பாக நான் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் ஏற்கனவே புகார் அளித்திருந்தேன். காவல் நிலையத்தில் எங்களை விசாரித்து, அவருக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள். இந்நிலையில், கடந்த 11.06.2018 இரவு சுமார் 7.30 மணியளவில், நானும் ஞானசம்பந்தமும் ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எனது மாமியாரை பார்ப்பதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் அவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு, கண்ணன் டிபார்ட்மெண்ட் ஸ்டோர் அருகில்

உள்ள நாட்ராயன் கோவில் அருகில் சென்று கொண்டிருந்தபோது, எங்களது வாகனத்திற்கு பின்னால் எதிரி அவரது ஆட்டோவை வைத்து இடித்தார். அதில் நான் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து விட்டேன் அதில் எனக்கு வலது புற தோளில் அடிபட்டது. வலது முழங்காலிலும் அடிபட்டது. நான் மயக்கம் அடைந்து விட்டேன். எதிரிய ஆட்டோவை அங்கேயே விட்டுவிட்டு சென்றுவிட்டார். அருகில் இருந்தவர்கள் என்னை ஆம்புலன்ஸ் மூலமாக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு வந்த போலீசார் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் அளித்தது. தான். புகர்வாக்கு மூலம் அ.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னை இடித்த ஆட்டோவை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். ஆட்டோவின் பின்புற கண்ணாடியில் அவர் எனது பெயரான ராதிகா என்ற பெயரை எழுதி இருப்பார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள ஆட்டோ தான் எதிரி என்னை இடித்த ஆட்டோ ஆகும். ஆட்டோவிற்கான புகைப்படங்களின் எண்ணிக்கை 4 ஆகும். **மேற்படி ஆட்டோவிற்கான புகைப்படங்களின் எண்ணிக்கை 4 அ.சா.பொ.1 குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகவில்லை, குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும், குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது)**
**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.123/2025
Deposition of Witness for L.W.3 / P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஞானசம்மந்தம் | | | |
| Father's Name | : | நல்லசிவம் | Occupation | : | Xerox shop |
| Village | : | அரச்சலூர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.01.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு அரச்சலூரில் குடியிருந்து கொண்டு, பவானி மெயின் ரோட்டில், கிறிஸ்து ஜோதி பள்ளிக்கு எதிர்ப்புறம் சிவா என்ற பெயரில் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன். அவர் எனக்கு தெரியும். அவர் எனது கடைக்கு வந்த வகையில் எனக்கு பழக்கம். அ.சா.1 ராதிகாவை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் மற்றும் எனது கடையில் வேலை செய்து வந்தார். அ.சா.1–க்கும், எதிரிக்கும் தொடர்பு இருந்து வந்தது. அ.சா.1 எனது கடையில் வேலை செய்வதால், எனக்கும், அ.சா.1–க்கும் தொடர்பு இருப்பதாக நினைத்துக் கொண்ட எதிரி என்னை எச்சரித்தார். பிறகு ஒரு நாள் எனது கடைக்கு வந்த எதிரி எனது கடையை உடைத்து விட்டார். இது தொடர்பாக நான் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். எதிரியை அழைத்து விசாரித்த போலீசார், அவரை எச்சரித்து அனுப்பினர்.

இந்நிலையில் கடந்த 11.06.2024 ஆம் தேதி அன்று, அ.சா.1 அவரது மாமியாருக்கு உடல்நிலை சரியில்லாமல் ஈரோடு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரை பார்ப்பதற்காக தன்னை அங்கு அழைத்துச் செல்லுமாறும் கூறினார். அதன்படி அன்றைய தினம் சுமார் 07.30 மணியளவில், நான்

அ.சா.1–ஐ எனது இருசக்கர வாகனத்தில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தேன். அப்போது நான் கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எதிரில் சென்று கொண்டிருந்தபோது எனது இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த எதிரி அவரது ஆட்டோவால் எனது வாகனத்தின் மீது மோதினார். அதில் பின்னால் அமர்ந்து வந்த ராதிகா கீழே விழுந்து விட்டார் அவருக்கு கை உடைந்து விட்டது. காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. நான் உடனடியாக 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, ஆம்புலன்ஸ் வந்தவுடன் ராதிகாவை ஆம்புலன்ஸ்–ல் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் முனைப்பில் இருந்தேன். அப்போது எதிரி அங்கிருந்து தப்பித்துவிட்டார். ஆட்டோவை அங்கேயே விட்டு விட்டு ஓடி விட்டார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகவில்லை, குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும், குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது)**

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.